# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No. 10/2022**

**நாள்– 13.03.2025**

**வா.சா.1 திரு. ராஜீ –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் ஏற்கெனவே எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். இன்று எனது தரப்பில் 12 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 15.03.2021ம் தேதி உபயவாதிகள் பிறப்புவித்துக்கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அசல் வா.சா.ஆ. 1 ஆகும். 2) 08.06.2000ம் தேதி 1ம் பிரதிவாதி கனகராஜ் என்பவரிடமிருந்து பெற்ற பதிவுக்கிரைய ஆவணத்தின் SRO நகல் (அசல் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது) வா.சா.ஆ.2 ஆகும். 3) 26.06.2009ம் தேதி பிரதிவாதிகள் தரப்பு பதிவு பாக பாத்தியதை விடுதலை ஆவணத்தின் SRO நகல் ம.சா.ஆ. 3 ஆகும். 4) 06.08.1977ம் தேதி பிரதிவாதிகள் தரப்பு பதிவு பரிவர்த்தனை ஆவணத்தின் SRO நகல் ம.சா.ஆ.4 ஆகும். 5) 06.08.1977ம் தேதி பிரதிவாதிகள் தரப்பு பதிவுக்கிரையஆவணத்தின் SRO நகல் ம.சா.ஆ.5 ஆகும். 6) 25.03.1999ம் தேதி அருணாசலம் செட்டியாரின் இறப்புச்சான்றின் SRO நகல் ம.சா.ஆ.6 ஆகும். 7) 1ம் பிரதிவாதியின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ. 7 ஆகும். 8) 2ம் பிரதிவாதியின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ. 8 ஆகும். 9) பிராதின் தபசில் சொத்துக்களை கணிணிப்பட்டாக்கள் பட்டா எண். 1538, 1612, 1616 மற்றும் 3429 ம.சா.ஆ. 9 வரிசை ஆகும். 10). 28.08.2021ம்தேதி வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய ரிஜிஸ்டர் அறிவிப்பின் அலுவலக நகல் (அஞ்சல் அலுவலக ரசீதுகளுடன்) வா.சா.ஆ. 10 ஆகும். 11) 31.08.2021ம் தேதி வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை இந்த பிரதிவாதிகள் 30.08.2021ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டைகள் 2 எண்ணம் வா.சா.ஆ. 11 வரிசை ஆகும். 12) வாதி வங்கியில் கணக்கு வைத்திருப்பதை காட்டக்கூடிய Transaction நகல் ம.சா.ஆ. 12 ஆகும்.

**(மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi